Thalaivaasal
தலைவாசல்
எங்கள் பாரம்பரியம்

# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 58 | thalaivaasaltv@gmail.com | செவ்வாய்க்கிழமை | டிசம்பர் 01, 2020





## புயல் முன்னெச்சரிக்கை கிழக்கு பாடசாலைகள் மூன்று நாட்களுக்குப் பூட்டு

கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலை களையும் எதிர்வரும் மூன்று நாட்களுக்கு மூடுமாறு, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் அதி காரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இன்று (01) மாகாண கல்விப்பணிப்பாளர்களுக்கு அவர் இவ்வாலோசனையை வழங்கியுள்ளார்.

இதன்படி நாளை புதன் கிழமை(02) முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (04) வரை கிழக்கு மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளும் மூடப்படும் என, கிழக்கு 03

# தாழமுக்கம் சூறாவளியாக மாறலாம் என எச்சரிக்கை!

வங்காள விரிகுடாவில் தற்போது (01) காணப்படும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை நாளை(02) மதியத்திற்கு முன்பாக( புயலுக்கு தேவையான காற்று சுழற்சி இன்னும் உருவாகவில்லை) புயலாக மாறும் என எதிர்பார்க்கப்படுவதாக யாழ். பல்கலைகழக புவியியல் துறை விரிவுரையாளர் நா.பிரதீபராஜா கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவித்ததாவது,

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையானது நாளை பிற்பகலுக்கு பின்னர் திருகோணமலைக்குள் நிலப்பகுதி நோக்கி நகரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாளை மாலை 4.00 மணியளவில் புயலின் வெளிவளையம் திருகோணமலையின் கடற்கரையை அண்மிக்கும். அதன்பின்னர் கிட்டத்தட்ட 3.30 மணி நேரத்துக்கு மேலாக திருகோணமலைக்கு அண்மித்து நிலைத்து நிற்கும் இப்புயல் இரவு 11.30 மணியளவில் அனுராதபுரம் மற்றும் வவுனியாப் பகுதியில் காணப்படும் இப்புயலானது வியாழக்கிழமை 03



## மாவீரர் நாள் தொடர்பாக முகநூலில் பதிவிட்ட ஊடகவியலாளர் கைது

மாவீரர் நாள் நினைவேந்தல் தொடர்பான பதிவை தனது 'பேஸ் புக்'கில் பதிவேற்றினார் என்ற குற்றச் சாட்டின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சுயாதீன ஊடக வியலாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வாழைச்சேனை - கிண்ணையடியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை கோகிலதாசன் (வயது 37) என்பவரே கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். 03

## மஹர சிறைக் கைதிகள் மரணம் சுயாதீன விசாரணைக்கு சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து!

மஹர சிறைச்சாலை வளாகத்தில் ஏற்பட்ட கலவரத்தில் 8 சிறைக் கைதிகள் மரணமடைந்தமை மற்றும் பலர் காயமடைந்த சம்பவத்தின் பின்னணி குறித்து பக்கச்சார்பற்ற, முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

மரணத்தை ஏற்படுத்தும் வகையில் கைதிகளுக்கு எதிராக சக்திகளைப் பயன்படுத்தல், சிறை அதிகாரிகளால் நேரடி துப்பாக்கிச் சூடு 03

## யாழில் அதிகரிக்கும் டெங்கு பணிப்பாளர் சத்தியமூர்த்தி எச்சரிக்கை

டெங்கு நோய் தாக்கம் காரணமாக இந்த வருடத்தில் யாழ் போதனா வைத்திய சாலையில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் மாத்திரம் 20 பேர் டெங்கு தாக்கம் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு இதுவரை 966 இந்த வருடத்தில் டெங்கு நோய் தாக்கம காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 03

# பிரிட்டன் கூலிப்படை இலங்கையில் போர்க்குற்றம்

## 20 ஆண்டுகளின் பின் தொடங்கியது விசாரணை



இலங்கை உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட பிரிட்டிஷ் கூலிப்படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டது தொடர்பான குற்றச்சாட்டுகளை லண்டன் பெருநகர காவல்துறையினர் விசாரிக்கத் தொடங்கியிருக்கின்றனர் என பிரித்தானிய செய்தி ஊடகமான பி.பி.சி செய்தி வெளியிட்டிருக்கிறது. 03

## மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பிரபாகரன் குமாரரட்ணம் பதவியேற்பு



மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிமன்ற நீதியரசராக பிரபாகரன் குமாரரட்ணம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் பதவியேற்றுள்ளார்.

இதன்மூலம் இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் 03

## விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டாம் பிரிட்டனிடம் இந்தியா கோரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை, பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து நீக்கக்கூடாது என இந்திய அரசு பிரித்தானியாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தகவல்கள் 03




# எதிர்வரும் 12 மணித்தியாலங்களில் கிழக்கை கடக்கவுள்ள சூறாவளி!




தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் உருவாகிய குறைந்த அழுத்தப் பிரதேசம் ஒரு தாழமுக்கமாக விருத்தியடைந்து திருகோணமலைக்கு தென்கிழக்காக ஏறத்தாழ 750 கி.மீதூரத்தில் நிலை கொண்டுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இத்தொகுதியானது அது அடுத்த 12 மணித்தியாலங்களில் ஒரு ஆழமான தாழமுக்கமாக விருத்தியடையக்கூடிய சாத்தியம் காணப்படுவதுடன் தொடர்ந்து வரும் 12 மணித்தியாலங்களில் ஒரு சூறாவளியாக வலுவடையக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

அது பெரும்பாலும் மேற்கு - வடமேற்கு திசையில் நகரக்கூடிய சாத்தியம் காணப் படுவதுடன், மட்டக்களப்புக்கும் முல்லைத் தீவுக்கும் இடையேயான இலங்கையின் கிழக்கு கரையை புதன்கிழமை மாலையளவில் கடக்கக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சில இடங்களில் 100மி. மீ. க்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் தொடர்ச்சியாக மழை பெய்யும் எனவும் அத்திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

மேல், மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேநேரம், வடக்கு, வடமத்திய கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை அதிகரித்த வேகத்தில் ஓரளவு மிகப்பலத்த காற்று வீசக்கூடும் எனவும் அத்திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளை களில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் என தெரி விக்கப்படுகிறது.

இதன் காரணமாக மின்னல் தாக்கங் களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அத்திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## தலைவாசல் — தினம் ஒரு ஆரோக்கிய தகவல் - 11

ஹெச்.ஐ.வி. (HIV) தொற்று வைரசினால் ஏற்படும் ஒரு தொற்றுநோயாகும்.ஹெச்.ஐ.வி தொற்று ஏற்பட்டவர்களை ஆரம் பத்திலேயே கண்டறிந்தால் அவர் களுக்கு சிகிச்சை அளிப்பதன் மூலம் அவர்கள் வாழ்நாளை நீட்டிக்க முடியும். . இந்த வைரசு தாக்கும்போது இயற்கையாக இருக்கும் நோய் எதிர்ப்புத் திற னில் குறைபாடு ஏற்பட்டு, அந்த குறைபாட்டின் காரணமாக நோய் எதிர்ப்பாற்றல் உடலில் சரியாக தொழிற்படாமல், ஏனைய தொற்றுநோய்களுக்கு ஆட்படக் கூடிய வாய்ப்பு. அதிகரிக்கிறது.

இந்த வைரசானது குருதி, சுக்கிலம், யோனித் திரவம் போன்ற உடல் திரவங்களின் மூலமாக ஒருவரிலிருந்து இன் னொருவருக்கு கடத்தப்படும். பொதுவாக பின்வரும் வழிக ளில் இந்தத் தொற்று ஏற்படும். அவையாவன பாதுகாப்பற்ற உடலுறவு, ஒருவர் பயன்படுத் திய ஊசிகளைப் பயன்படுத் தல், குழந்தை பிறப்பின்போது தாயிலிருந்து சேய்க்கு, குருதி சார் பொருட்கள் மூலம்.

எச் .ஐ. வி மேலே குறிப்பிட்ட முறைகளில் தான் தொற்றடை வதனால் எச் ஐ வி கொண்ட ஒரு வருடன் விளையாடுவதாலோ ,உணவைப் பகிர்வதாலோ, கை குலாவுவதாலோ, கட்டிப்பிடிப்ப தாலோ பரவலடையாது.

உடலுறவின் மூலம் எச் ஐ வி தொற்றிவிடாமல் இருக்க கட் டாயமாக பின்வரும் வழிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் நம்பிக் கைக்குரிய உறவுமுறையுடன் மாத்திரமே உடலுறவு கொள்ளு தல் அல்லது ஆணுறைகளை உபயோகித்து உடலுறவு கொள் ளுதல் (பாதுகாப்பான உடலுறவு).

ஹெச்ஜவி தொற்றிற்கான பரிசோதனைகளை அரச வைத் தியசாலைகளில் இலவசமாக செய்துகொள்ளலாம்.

**வைத்தியகலாநிதி கோ.றஜீவ்**

## சாதாரண தரப் பரீட்சை முன்னர் தீர்மானிக்கப்பட்ட தினத்தில் நடைபெறாது

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முன்னர் தீர்மானிக்கப்பட்ட தினத்தில் நடைபெறாது என கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் இன்று (01) இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர், புதிய திகதி பரீட்சைக்கு 06 வாரங் களுக்கு முன் அறிவிக்கப்படும் என கூறினார்.

தற்போது நாட்டில் உள்ள நிலைமையில் பரீட்சைகளை நடத்துவது அநீதியான தொன்று என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாக முன்னர் கருத்து தெரிவித்த அமைச்சர், தற்போதைய சூழ்நிலையில், 11 ஆம் வகுப்பில் படிக்கும் மாணவர்களில் சுமார் 50 சதவீதமான மாணவர்கள் தற்போது கல்வியைத் தொடர முடியாத சூழலில் இருப்பதாக சுட்டிக்காட்டியிருந்தார்.

## எங்கட புத்தகங்கள் கண்காட்சியும் விற்பனையும்

சுன்னாகம் பொது நூலகத்தில் எங்கட புத்தகங்கள் கண்காட்சியும் விற்பனையும் 30.11.2020 (நேற்று) ஆரம்பமாகியது. எதிர்வரும் டிசெம்பர் 7ஆம் திகதி வரை இடம்பெறும் நிகழ்வின் ஈழத்து எழுத்தாளர்களின் பல்வேறு நூ ல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள் ளது. "எங்கட புத்தகங்கள்" அமைப்பானது ஈழத்து புத்த கங்களை வாசகர்களிடம் எடுத்து செல்லும் பாரிய பணியினை மேற்கொண்டுவருகின்றனர்.

மேலும் கண்காட்சி நிகழ்வில் அமைக்கப்பட்டுள்ள சிறகுகள் அமையம் புத்தக சேகரிப்பு நிலையில் புதிய மற்றும் பாவித்த நூல்களை அன்பளிப்பு செய்ய முடியும். குறித்த நூல்கள் சிறகுகள் அமையம் ஊடாக மேற்கொள் ளப்படும் நூலகங்களுக்கு வழங் கப்படும்

## மணல் கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டதாக சந்தேகிக்கப்பட்ட இளைஞன் மீட்பு!

மணல் கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் இளைஞர் ஒருவர் கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலையில் வீதியில் மீட்கப்பட்டு பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் பருத்தித்துறை வல்புரம் குறிச்சிப் பகுதியில் அவர் மீட்கப்பட்டார் என கூறியே வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்ட குறித்த இளைஞன், தன்னை கும்பல் ஒன்று கடத்திச் சென்று தாக்கியதாக தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை வல்லிபுரக்குறிச்சி சிங்கைநகர் பகுதியில் வசிக்கும் குறித்த இளைஞனின் குடும்பத்தினருக்கு சொந்த மாக பிறிதொரு இடத்தில் இருக்கும் வயல் காணியில் ஒரு குழுவினர் சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வில் ஈடுபட்டு வந்துள்ளனர்

அதனால் மணல் கடத்தல்காரர்களுக்கும் காணி உரிமையாளருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது.

அந்நிலையில், மணல் கடத்தல் கும்பல் கடந்த சனிக்கிழமை மாலை காணி உரிமையாளரின் வீட்டிற்கு வாள்களுடன் சென்று மிரட்டிச் சென்றுள்ளனர்.

அதுதொடர்பில் கும்பலுக்கு எதிராக மிரட்டப்பட்டவரால் பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. எனினும் பொலிஸார் உடனடி நடவ டிக்கையை எடுக்கவில்லை.

இந்த நிலையில் அன்றைய தினம் (சனிக்கிழமை) நள்ளிரவு மீண்டும் அந்த வீட்டிற்குள் வாள்களுடன் மணல் கடத்தல் கும்பல், வீட்டினுள் நுழைந்த வேளை வீட்டில் இருந்தோர், அருகில் உள்ள வீட்டில் தஞ்சம் புகுந்தனர். வீட்டினுள் புகுந்த கும்பல் வீட்டில் இருந்த மோட்டார் சைக்கிள், தொலைக்காட்சி பெட்டி உள்ளிட்ட பெறுமதியான பொருள்களை சேதப்படுத்தியது.

அதன் பின்னர் குறித்த வீட்டார் தஞ்சமடைந்திருந்த அயல் வீட்டில் சென்று அங்கும் அத்துமீறி உள்நுழைந்த கும்பல் தஞ்சமடைந்திருந்தவர்களை தாக்க முற்பட்ட போது தடுக்க முற்பட்ட அந்த (அயல்) வீட்டைச் சேர்ந்த முதியவரை தாக்கியிருந்தனர்.

இந்தத் தாக்குதலில் சிங்கை நகர் வல்லிபுரக்குறிச்சியைச் சேர்ந்த சின்னத்துரை துரைராசா (வயது 68) என்ற முதியவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனு மதிக்கப்பட்டார்.

சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வு இடம்பெற்றுவரும் காணிக்கு சொந்தமான குடும்பத்தைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை பிரதீபன் (வயது-24) என்ற இளைஞன் அன்றைய தினம் சனிக்கிழமை மாலை குடிதண்ணீர் எடுப்பதற்காக மோட்டார் சைக்கிளில் சென்ற நிலையில் காணாமற் போயிருந்தார்.

அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி முராவில் பகுதியில் மீட்கப்பட்டது. அந்த மோட்டார் சைக்கிளில் சேதங்களுக்கு உள்ளாகியிருந்தது.

இந்த நிலையிலேயே காணாமற்போன இளைஞன் கைகளும் கால்களும் கட்டப் பட்ட நிலையில் அவரது வீட்டுக்கு அண்மையாக வல்லிபுரக் குறிச்சி வீதியில் நேற்று திங்கட்கிழமை இரவு 11 மணியள வில் மீட்கப்பட்டுள்ளார்

இளைஞன் கைகள் கால்கள் கட்டப் பட்ட நிலையில் வீதியில் காணப்பட்டதை கண்ணுற்ற ஒருவர் அவசர அம்புலன்ஸ் சேவைக்கு அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற அம்புலன் ஸில் இளைஞன் ஏற்றப்பட்டு மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

அவரது உடலில் அடி காயங்கள் காணப்படுவதாகவும் சிகிச்சையளிக் கப்படுவதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன

பருத்தித்துறை பொலிஸாருக்கு வைத்தியசாலையால் தகவல் வழங் கப்பட்டுள்ளது. பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பிரிட்டன் கூலிப்படை...

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

1980களில் தமிழ் பிரிவினைவாதிகளை எதிர்த்துப் போராடுவதற்கு, இலங்கை காவல்துறையினரில் ஒரு பிரிவினருக்கு பயிற்சி கொடுத்தது தனியார் பாதுகாப்பு நிறுவனமான கீனி மீனி சர்வீசஸ். இவர்கள் இலங்கை காவல்துறையின் அதிரடிப்படையினருக்கு பயிற்சி கொடுத்துள்ளனர்.

இந்த அதிரடிப்படையினர், இலங்கை போரின்போது நடந்த பல மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டிருக்கிறார்கள். இதில், தமிழ் மக்களை விசாரணையே இல்லாமல் கொலை செய்த குற்றங்களும் அடக்கம்.

பிரிட்டனில் போர் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரிக்கும் பொறுப்பு, மெட்ரோ போலிட்டன் காவல்துறையின் அதிகாரத்துக்கு உட்பட்ட விஷயமாகும்.

அந்த வகையில், ஒரு பிரிட்டன் அமைப்பு முதல் முறையாக பிரிட்டனைச் சேர்ந்த கூலிப் படையினரின் அயல்நாட்டுச் செயல்பாடு தொடர்பாக தற்போது விசாரணை நடத்துவது இதுவே முதல் முறை என நம்பப்படுகிறது.

இலங்கை உள்நாட்டுப் போரின்போது, பிரிட்டனைச் சேர்ந்த கூலிப்படையினர் போர் குற்றங்களைச் செய்ததாக கடந்த மார்ச் மாதம் மெட்ரோபோலிட்டன் காவல்துறைக்கு சில தகவல்கள் கிடைத்தன. அதைமதிப்பிட்ட பின், விசாரணை தொடங்கப்பட்டிருக்கிறது என்கிறார் அந்த காவல்துறையின் செய்தித்தொடர்பாளர்.

பிரிட்டன் அரசு இத்தனை காலமும் ரகசியமாக வைத்திருந்த ஆவணங்களை, சமீபத்தில் ரகசியமற்ற ஆவணங்களாக வகைப்படுத்தியது. அதே போல பத்திரிகையாளர் ஃபில் மில்லர் தகவல் சுதந்திரத்தின் கீழ் சேகரித்த பல தரவுகளைத் தொகுத்து, முநநமௌை ஆநநமௌை: வுாந டீசவைளைா ஆநசஉநயெசநைள றுாழ புழவ யுறயல றுவைா றுயச ஊசைஅநள என்ற புத்தகத்தை எழுதி கடந்த ஜனவரி மாதம் வெளியிட்டார்.

இவைதான் பிரிட்டிஷ் கே.எம்.எஸ் தனியார் கூலிப் படையினர், இலங்கை உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு இருக்கின்றனர் என்பதற்கான ஆதாரங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளன.

“லண்டன் காவல்துறையின் இந்த விசாரணையை, பிரிட்டனில் வாழும் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் சமூகத்தினர் உன்னிப்பாக கவனித்து வருகின்றனர்,” என்கிறார் ஃபில் மில்லர்.

அந்த சமூகத்தினர் பலரும், இலங்கையில் உள்நாட்டுப்போர் நடந்து கொண்டிருந்த காலங்களில் அந்நாட்டில் இருந்து வெளியேறி பிரிட்டனில் தஞ்சம் அடைந்தவர்கள்.

“1980களில் கே.எம்.எஸ் படையினர் இலங்கையில் இருந்த நேரத்தில், பல தமிழ் மக்கள் பிரிட்டனில் அகதிகளாக வந்தனர்,” என்கிறார் ஃபில் மில்லர்.

அந்த காலங்களில் ஹெலிகாப்டர்களில் பொருத்தப்பட்டிருந்த தானியங்கி துப்பாக்கிகளால் மக்கள் சுடப்பட்டதை பார்த்ததை இப்போதும் சிலர் நினைவுகூர்கிறார்கள். அத்தகைய தாக்குதல்களின்போது, அந்த ஹெலிகாப்டர்களை இயக்கியது பிரிட்டனைச் சேர்ந்த கூலிப் படையினர்தான் என்பது தெரியவரும் போது இந்த தகவல்கள் பலரையும் அதிர்ச்சி அடைய வைத்திருக்கின்றன என்கிறார் மில்லர்.

26 ஆண்டுகால பயங்கர மோதல்களுக்குப் பின்னர், 2009ஆம் ஆண்டு மே மாதம், இலங்கை ராணுவம், தமிழீழ விடுதலைப்புலிகளை வீழ்த்தியது.

அந்த போர், இலங்கையை இன அடிப்படையில் இரண்டாகப் பிரித்தது - ஒரு தனி அரசை விரும்பும் தமிழ் கிளர்ச்சியாளர்கள் ஒரு பக்கம். பெரும்பான்மை பௌத்த மதத்தை பின்பற்றும் சிங்களர்கள் ஆதிக்க அரசாங்கம் மறு பக்கம் என இரு முரண்களுக்கு சாட்சியாக இருந்தது.

இந்த சண்டையில் 1,00,000 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் சுமார் 20,000 பேர் (பெரும்பாலும் தமிழர்கள்) காணவில்லை.

இந்த போரின் இறுதியில் இரு தரப்பினரும் மோசமாக அட்டூழியம் செய்ததாக ஐ.நா அமைப்பு குற்றம்சாட்டியது. அதிலும் குறிப்பாக, இறுதி கட்ட போரின்போது போர் குற்றங்கள் தீவிரமாக இருந்ததாக ஐ.நா குறிப்பிட்டது.

இலங்கையில் யார் எல்லாம் காணவில்லையோ அவர்கள் எல்லாம் இறந்துவிட்டதாக கருதலாம் என இந்த ஆண்டின் தொடக்கத்தில் தான் இலங்கை அதிபர் முதல் முறையாக ஒப்புக் கொண்டார்.

கே.எம்.எஸ் நிறுவனம், டேவிட் வாக்கர் என்கிற முன்னாள் பிரிட்டிஷ் விமானப்படை (எஸ்.ஏ.எஸ்) அதிகாரியால் நிறுவப்பட்டது. தற்போது கே.எம்.எஸ் நிறுவனம் இல்லை. ஆனால் 78 வயதான டேவிட் வாக்கர், சலாதின் செக்யூரிட்டி என்கிற நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக இருக்கிறார். இந்த நிறுவனம் கென்சிங்டன் என்கிற இடத்தில் உள்ளது.

1980களில் போர் குற்றங்களில், டேவிட் வாக்கர் அல்லது கே.எம்.எஸ் நிறுவனத்தின் ஊழியர்கள் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்படுவதை திட்டவட்டமாக மறுக்கிறோம் என டேவிட் வாக்கரின் பிரதிநிதி ஒருவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார்.

“சலாதீன் செக்யூரிட்டி என்கிற நிறுவனம், முழுமையாக ஒரு தனி நிறுவனம். இந்த நிறுவனத்துக்கும் இலங்கைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. டேவிட் வாக்கர் கே.எம்.எஸ் நிறுவனத்தின் பங்குதாரரோ அல்லது இயக்குநரோ அல்ல.”

“லண்டன் பெருநகர காவல்துறையினர், போர் குற்றம் தொடர்பான விசாரணை தொடர்பாக, சலாதின் நிறுவனத்திடமிருந்தோ, டேவிட் வாக்கரிடம் இருந்தோ, எந்தவொரு உதவியையும் கேட்கவில்லை. ஒருவேளை உதவி கேட்டால், மகிழ்ச்சியாக ஒத்துழைப்பார்கள்” என டேவிட் வாக்கரின் பிரதிநிதி வெளியிட்ட அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

## தாழமுக்கம்...

அதிகாலை 1.30 மணியளவில் மன்னார் மற்றும் புத்தளத்தின் வடபகுதிக்குள் பிரவேசித்து காலை 7.00 மணியளவில் அரபிக்கடலுக்குள் நகரும்.

இது இன்னமும் புயலுக்குரிய காற்றுச் சுழற்சியைப் பெறாமையினால் இதன் நகர்வுப்பாதையும் நேரமும் வேறுபடலாம் என்பதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திருகோணமலையில் அல்லது அதனை அண்மித்த பகுதியில் இது கரையை அடையும்போது காற்று கடும் வேகத்தில் வீசுவதோடு மிகக் கனமழையும் பொழிய வாய்ப்புண்டு. இந்தப் புயலின் மிக ஆபத்தான பகுதியாக திருகோணமலை மாவட்டம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளே இருக்கும் என்பதனால் நாளை(02.12.2020) காலை 6.00 மணியிலிருந்து அவதானமாகவும் போதுமான தயார்ப்படுத்தலுடனும் இருப்பது அவசியம்.

வவுனியாவின் பல பகுதிகளும் குறிப்பாக வவுனியா தெற்குப் பகுதி புயலின் முழுச் செல்வாக்குப் பகுதிக்குள் வருவதனால் காற்றின் வேகம் உயர்வாக இருக்கும் என்பதுடன் மிகக் கனமழையும் பொழிய வாய்ப்புண்டு. ஆகவே இப்பகுதி மக்களும் நாளை பகல் 2.00 மணியிலிருந்து மிகக் கவனத்துடன் இருப்பது அவசியமாகும்.

அனுராதபுரத்தின் வட பகுதி புயலின் செல்வாக்கினுள் வருவதால் இப்பகுதி மக்கள் நாளை நண்பகல் 12.00 மணியிலிருந்து அவதானத்துடன் இருப்பது அவசியமாகும்.

புத்தளத்தின் வடக்குப் பகுதி மற்றும் மன்னாரின் தெற்குப் பகுதியூடாக புயல் அரபிக் கடலுக்குள் நுழையும் என எதிர்பார்க்கப்படுவதனால் அரிப்பு,சிலாவத்துறை, முள்ளிக்குளம், பொம்மரிப்பு, எழுவங்குளம், தந்திரிமலைப் பகுதி மக்கள் எதிர்வரும் 02.12.2020 புதன் நள்ளிரவிலிருந்து மிக அவதானமாக இருத்தல் அவசியம். மிகக் கடுமையான வேகத்தில் காற்று வீசக் கூடும் அத்துடன் மிகக்கனமழையும் கிடைக்கும்.

திருகோணமலைப் பகுதியில் புயல் கரைதொடும் பொழுது அதன் உள் மற்றும் வெளி வளையத்திற்குள் முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பின் பல பகுதிகள் உள்வாங்கப்படுமாகையால் நாளை நண்பகலிலிருந்து இந்தப் பகுதி மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருப்பது அவசியமாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நாளை காலையிலிருந்து பரவலாக மழை தொடங்கி நண்பகலுக்குப் பின்னர் கன மழை பொழிய தொடங்கும். காற்றின் வேகமும் உயர்வாக இருக்கும். எனவே மிக அவதானமாக இருத்தல் அவசியம்.

வடக்கு மற்றும் கிழக்கு கடற்பகுதிகள் மிகக் கொந்தளிப்பாகக் காணப்படும். எனவே எந்தக் காரணம் கொண்டும் கடற்பகுதிக்குள் அல்லது கடற்கரைப் பகுதிக்குள் செல்ல வேண்டாம்.

வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு, திருகோணமலை, மற்றும் மட்டக்களப்பின் கரையோரப் பகுதிகளில் நாளைமுதல் பலத்த காற்று வீசுவதுடன் அலைகளின் உயரமும் உயர்வாக இருக்கும் என்பதனால் மீனவர்கள் தங்களின் கடற்கலங்களை பாதுகாப்பாக நிறுத்துவது உசிதமானது.

புயலின் போது மரங்கள் முறிந்து வீழ்வதனாலும் மின் கம்பங்கள் சரிவதனாலும் மின்சார வடங்கள் அறுந்து போய் இருக்கலாம். ஆகவே அவற்றுக்கு அண்மையாகக்கூட செல்லாதீர்கள்.

உங்களின் வீடுகளுக்கு அண்மித்துக் காணப்படும் கடும் காற்றினால் பாதிக்கப்படும் மரங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி அவற்றை உடனடியாக அகற்றுங்கள்.

மிக முக்கியமாக தற்காலிக வீடுகளில் இருக்கும் உறவுகளே.. உங்கள் தகரக்கூரைகள், மண்சுவர்கள், கூரை மரங்கள் மற்றும் மின்னிணைப்புக்கள் மீது மிகுந்த அவதாரமான இருங்கள்.

இந்த ஆழ்ந்த தாழமுக்கம் தொடர்பான மேலதிக விபரங்கள் தொடர்ந்தும் இற்றைப்படுத்தப்படும்.

## புயல் முன்னெச்சரிக்கை...

மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் அறிவித்துள்ளார்.

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள குறைந்த அழுத்த நிலை, ஒரு தாழமுக்கமாக விருத்தியடைந்து கிழக்கு கடற்கரை வலயத்தை நோக்கி வருவதாக, வளிமண்டலவியல் திணைக்களத்தினால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, மாகாண மக்களின் பாதுகாப்புக் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்நிலைமையினால், சூறாவளி போன்ற அனர்த்தங்கள் ஏற்படும் பட்சத்தில் மக்களை பாதுகாப்பாக தங்க வைக்கும் பொருட்டான முகாம்களாக பாடசாலைகளை பயன்படுத்த முடியும் என்பதும் இதற்கு மற்றொரு காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மஹர சிறைக் கைதிகள்...

நடத்தப்பட்டமைக்கான அடிப்படைக் காரணங்கள் விசாரணையில் கண்டறியப்பட வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

மஹர சிறைச்சாலை வளாகத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோயை வேகமாகப் பரவிவரும் நிலையில் அது தொடர்பில் கைதிகளிடையே ஏற்பட்ட அமைதியின்மையை அடுத்து இடம்பெற்ற கலவரத்தில் 8 கைதிகள் கொல்லப் பட்டுள்ளனர். இதுவரை 70-க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ள சம்பவத்தின் பின்னணியில் சர்வதேச மன்னிப்புச் சபை இவ்வாறு கோரியுள்ளது.

சர்வதேச மன்னிப்பு சபையின் பொதுச் செயலாளர் அலுவலக பணிப்பாளர் டேவிட் கிரிஃபித்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் சிறைச்சாலைச் சம்பவம் குறித்துக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நெருக்கடியைத் தவிர்க்க நூற்றுக் கணக்கான கைதிகளை விடுவிப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை இலங்கை அதிகாரிகள் செயற்படுத்த வேண்டும்.

அவ்வாறு செய்யத் தவறினால் சிறைகளில் கைதிகளிடையே தொற்று நோய் பரவல் மேலும் அதிகரிக்கும். இதனால் கைதிகளிடையே அமைதியின்மை உருவாவதுடன், வன்முறைகள் அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளது எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழில் அதிகரிக்கும்...

இதேவேளை டெங்கு நோய் தாக்கம் தொடர்பில் யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வெளியிட்டுள்ள இந்த அறிவித்தலில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள் மாத்திரம் உள்ளடங்குகின்றன குறிப்பிடத்தக்கது.

## மேன்முறையீட்டு...

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பதவி உயர்வு பெறும் இரண்டாவது மலையகத் தமிழர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இன்று (டிசெ.1) செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் நியமனத்தின் போது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக பிரபாகரன் குமாரரட்ணம், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்னிலையில் உறுதியுரை எடுத்துக்கொண்டார்.

25 ஆண்டுகள் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் வழக்குத் தொடுனராக கடமையாற்றிய சட்டத்தரணி பிரபாகரன் குமாரரட்ணம், மூத்த பிரதி மன்றாடியார் அதிபதிவரை பதவியுயர்வு பெற்று பல்லாயிரக் கணக்கான குற்றவியல் வழக்குகளை நெறிப்படுத்தியிருந்தார்.

## விடுதலைப் புலிகள்...

வெளியாகி உள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில், கடந்த 2000 ஆம் ஆண்டளவில் பிரித்தானியா இணைத்தது.

தற்போது யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்கள் கடந்துள்ள நிலையில் விடுதலைப் புலிகள் எந்தவித வன்முறைகளிலும் ஈடுபடவில்லை. இதனால் அவ் அமைப்பை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இருந்து நீக்க வேண்டுமென பல தரப்பினராலும் தொடர்ந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தொடர்ந்த வழக்கு ஒன்றில் தீர்பளித்த பிரித்தானியாவின் மீழாய்வு விசாரணை ஆணையம் புலிகள் மீதான தடை தவறானது என குறிப்பிட்டு இருந்தது.

இதனையடுத்து, புலிகள் மீதான தடையை பிரித்தானியா நீக்கவுள்ளதாக கருத்துக்கள் நிலவியது.

இவ்வாறான சூழலில் புலிகள் மீதான தடையை பிரித்தானியா நீக்கக் கூடாதென, பிரித்தானிய உள்துறை அமைச்சிடம் இந்தியா கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

## மாவீரர் நாள்...

வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அவரிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணையின் பின்னர் அவர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் என்று வாழைச் சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

# வடக்கில் இராணுவத்தினர் பொலிஸார் அச்சுறுத்தல்




வடக்கில் இந்துக்கள் தங்களது பண்டிகைகளை கொண்டாடுவதற்கு இராணுவத்தினர் பொலிஸார் அச்சுறுத்தல் விடுப்பது குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கண்டனம் வெளியிட்டார்.

நாடாளுமன்றில் இன்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெறும் குழு நிலை விவாத்தில் கருத்து தெரிவித்த அவர், இந்துக்களின் பண்டிகை தொடர்பாக இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் கூறினார்.

அத்தோடு அண்மையில் கார்த்திகை விளக்கீடு அன்று கிளிநொச்சி பரந்தனில் முதியவர் ஒருவர் தாக்கப்பட்டமை மற்றும் யாழ்.பல்கலை மாணவர் கைது செய்யப்பட்ட சம்பவம் குறித்தும் சிறிதரன்அதிருப்தி வெளியிட்டார்.

மேலும் இந்த சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்த வேண்டும் என குறிப்பிட்ட சிறிதரன், சுன்னாகம் பொலிஸார் மிகவும் அராஜகமான முறையில் நடந்துகொள்வதாகவும் குற்றம் சாட்டினார்.

# அதிகரிக்கும் கொரோனா தொற்று



நாட்டின் தற்போதைய நிலைமைக்கு மத்தியில் வைபவங்களை ஏற்பாடு செய்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தின் பணிப்பாளர் விசேட வைத்தியர் பாலித்த கருணாபேம பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இது தொடர்பாக தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலப்பகுதியில் கடைகளுக்கு செல்வதை அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் வரையறுக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வர்த்தக நிலையங்களுக்கு வீட்டில் இருந்து ஒருவர் மாத்திரம் செல்வது பொருத்தமானதாகும் என்றும் இதுதொடர்பில் வீட்டில் உள்ள அனைவரும் தற்போதைய நிலைமையை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் பொது மக்கள் பொறுப்புடன் செயற்படுவதன் மூலம் வைரஸ் தொற்று பரவுவதை கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டவரை மீள அதே குற்றத்திற்காக கைது செய்த பொலிஸ்



போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில், நீதிமன்றினால் தண்டம் அறவிடப்பட்டு விடுவிக்கப்பட்ட முதியவரை பொலிசார் மீள கைது செய்து பொலிஸ் நிலையத்தில் ஒரு நாள் தடுத்து வைத்து நீதிமன்றில் மீள முற்படுத்தியுள்ளனர்.

அதன் போது முதியவரின் குடும்பத்தினரால், அவர் ஏற்கனவே நீதிமன்றில் குறித்த குற்றத்திற்காக தண்டப்பணம் செலுத்தியமைக்கான ஆவணங்களை சமர்ப்பித்த போது, பொலிஸார் தாம் தவறுதலாக கைது செய்து விட்டோம் என மன்றில் கூறியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

அச்சுவேலி பொலிஸ் பிரிவில் வசிக்கும் முதியவர் ஒருவர் கடந்த ஆறு மாத காலப்பகுதிக்கு முன்னர் வீதி போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டு சுமத்தி, மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அதனையடுத்து மன்றில் முன்னிலையான முதியவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டு, மன்றினால் விதிக்கப்பட்ட தண்டபணத்தை செலுத்தி இருந்தார்.

இந்நிலையில், அச்சுவேலி பொலிஸார் முதியவரின் வீட்டிற்கு சென்று, போக்குவரத்து விதிகளை மீறிய குற்றத்திற்காக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்த போது மன்றில் முன்னிலையாகத குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக நீதிமன்றினால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என கூறி கைது செய்துள்ளனர்.

குறித்த முதியவர் மன்றில் தண்டப்பணம் செலுத்திய ஆவணங்களை பொலிஸாரிடம் குடும்பத்தினர் காண்பித்துள்ளனர். அத்துடன், முதியவர் இருதய நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார், நீதிமன்றில் தாம் முன்னிலையாவதாகவும், அல்லது காலையில் பொலிஸ் நிலையம் வருவதாகவும் கூறியுள்ளனர்.

குடும்பத்தினர் கூறிய எவற்றையும் செவிமடுக்காத பொலிஸார், எதுவாகினும் நீதிமன்றில் பாருங்கள் என கூறி முதியவரை கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

பொலிஸ் நிலைய தடுப்பு காவலில் ஒருநாள் முழுவதும் தடுத்து வைத்திருந்த முதியவரை மறுநாள் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

அதன் போது முதியவர் சார்பில், அவர் ஏற்கனவே குறித்த குற்றத்திற்காக தண்டம் செலுத்திய ஆவணங்கள் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டதை முதியவரை மன்று விடுவித்தது.

குற்றத்திற்கு தண்டம் செலுத்திய முதியவரை தற்போதைய கொரோனோ சூழலிலை கூட கவனத்தில் எடுக்காது, இருதய நோயாளியான அவரை பொலிஸார் ஒருநாள் முழுவதும் தடுப்பு காவலில் வைத்திருந்த பொலிஸாரின் நடவடிக்கை தொடர்பில் முதியவரின் உறவினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் அசண்டையீனத்தாலையே மன்றினால் தண்டிக்கப்பட்ட ஒருவர் மீளவும் அதே குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார் என பொலிஸ் தகவல் மூலம் அறிய முடிகிறது.

# ஜனவரி 1 முதல் சுற்றுலாப் பயணிகளை வரவேற்க புதிய வழிகாட்டுதல்கள்!

நாட்டில் சுற்றுலாத் துறையினை மீண்டும் ஆரம்பிப்பது குறித்த கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

அதன்படி சுகாதார அமைச்சின் ஊழுஏஐனு-19 மருத்துவ மேலாண்மை நிபுணர் குழு சுற்றுலாத் துறையுடன் இணைந்து அதற்கான வழிகாட்டுதல்களைத் தயாரித்துள்ளது.

அதன்படி அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் சர்வதேச பயணிகளுக்காக இரு விமான நிலையங்களையும் மீண்டும் திறக்க பரிந்துரைத்துள்ளதாக இலங்கை சுற்றுலாத் தலைவர் கிமர்லி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், சுகாதார அதிகாரிகளின் ஒப்புதலுக்கான குறித்த வழிகாட்டுதல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் சாதகமான பதிலுக்காக காத்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த நெறிமுறை சுகாதார அமைச்சினால் தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

அந்தவகையில் சுற்றுலாப் பயணிகள் கட்டாயம் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள் அவர்கள் தனிமைப்படுத்தப்படும் ஹோட்டல்களுக்கு முன்பதிவு செய்தல் அல்லது பணம் செலுத்துபவர்களுக்கு மட்டுமே விசா வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

லெவல் 1 தங்குமிடத்தில், சுற்றுலாப் பயணிகள் வளாகத்திற்குள் தங்கவும், குறிப்பிட்ட விருந்தினர், குடும்பம் அல்லது குழுவினருக்காக பிரத்தியேகமாக தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு மட்டுமே செல்லவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஆனால் கே.பி.எம்.ஜி. சான்றளிக்கப்பட்ட பாதுகாப்பான தங்குமிடமாக இருக்கும் லெவல் 2 விடுதிகளில் 14 நாட்களுக்கு மேல் தங்கியிருக்க சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவார்கள்,

மேலும் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலா வழிகாட்டியுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட சுற்றுலா தளங்களைப் பார்வையிடவும் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா தளங்கள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி திணைக்களத்தின் இணையதளத்தில் கிடைக்கும். 28 நாட்களுக்கு மேல் தங்கியிருக்கும் சுற்றுலாப் பயணிகள் தங்குமிடங்களை இலவசமாக பதிவுசெய்ய முடியும்.

அத்தோடு நீண்ட கால பயணிகள், இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் அல்லது இலங்கை கடவுச்சீட்டை வைத்திருப்பவர்கள், குடியுரிமை அனுமதி வைத்திருப்பவர்கள், சுற்றுலா மற்றும் விளையாட்டு சுற்றுலா விசா வகைகள் என்பன வழிகாட்டுதல்களின்படி பரிசீலிக்கப்படும்.

மேலும் தற்போது ஒரு மாதத்திற்கு பதிலாக ஆறு மாதங்களுக்கு விசா வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அவை அமைச்சரவை அங்கீகாரத்திற்காக காத்திருப்பதாகவும், மறு அறிவித்தல் வரும்வரை ஒன் அரைவல் விசாக்களை வழங்குவது இடைநிறுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



வழிகாட்டுதல்களில் அனைத்து பயணிகளும் ஒரு உள்ளூர் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து குறைந்தபட்சம் ஒரு மாத காலத்திற்கு விசா விண்ணப்ப செயற்பாட்டின் போது ஒன்லைனில் கட்டாய ஊழுஏஐனு-19 காப்பீட்டைப் பெற வேண்டும்.

ஏனெனில் இலங்கையில் தங்கியிருக்கும் போது எந்தவொரு உடல்நலம் தொடர்பான செலவுகளையும் அரசாங்கம் ஏற்காது என்பதனால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தளை சர்வதேச விமான நிலையம் என்பன ஊடக போக்குவரத்து மேற்கொள்ளப்படும்.

சுற்றுலாப் பயணிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கையை கருத்திற்கொண்டு ஒரு நாளைக்கு மொத்தம் 300க்கும் மேற்பட்ட பயணிகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை விமான நிலையத்திற்கு வருவதற்கு 72 மணி நேரத்திற்கு முன்னர் எடுக்கப்பட்ட கட்டாய பி.சி.ஆர் சோதனை அறிக்கை அவசியம்.

நாட்டை வந்தடைந்தவுடன் அன்டிஜென் சோதனை அல்லது பி.சி.ஆர் சோதனை சுகாதார அமைச்சு அல்லது தனியார் மருத்துவமனைகளால் விமான நிலையத்தில் நடத்தப்படும்.

மேலும் நாட்டை வந்தடைந்த சுற்றுலாப் பயணிகள் பொது போக்குவரத்தைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள்

அத்தோடு விமான நிலையத்திலிருந்து சான்றளிக்கப்பட்ட ஹோட்டல்களுக்கு பயணிக்கும் பொறுப்பு சான்றளிக்கப்பட்ட ஹோட்டல் அல்லது பயண முகவரால் ஏற்பாடு செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.